2020 செப்டம்பர் 16]

16—

கால்நடை மருத்துவமனை

*57400—திரு. ஆ. கோவிந்தசாமி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி, தென்கரை கோட்டை ஊராட்சி, வடகரை பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியை சீரும் சிறப்புமாக வழிநடத்திக் கொண்டிருக்கும், விவசாயிகளினுடைய விடிவெள்ளியாகவும், சாமானியர்களின் சாதனை முதல்வராகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியிலே தமிழகம் எல்லா துறைகளிலுமே முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. அந்தவகையில், தமிழக வரலாற்றில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு சரித்திர சாதனையாக இந்த ஆண்டு மட்டும் 3 கால்நடை மருத்துவக் கல்லூரிகளைக் கொடுத்த அரசு நம்முடைய எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

சேலம் மாவட்டம், தலைவாசலில் உலகத்தரம்வாய்ந்த ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்கா ரூ.1,000 கோடியில் உருவாக்கப்பட்டு வருகிறது. இவ்வளாகத்தில் ரூ.213 கோடி செலவில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி; இரண்டாவதாக மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுடைய தேனி மாவட்டம், வீரபாண்டியில் ரூ.254 கோடி செலவில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி; மூன்றாவதாக திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, பண்ணைக்கிணற்றில் ரூ.253 கோடி செலவிலே ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி என மூன்று கல்லூரிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இதுபோன்று உடுமலைப்பேட்டை தொகுதியில் ஒரு கல்லூரி வழங்கி சரித்திர சாதனை படைத்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் அவர்களுக்கும், என் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி, தென்கரை கோட்டை ஊராட்சி, வடகரை பகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய கால்நடை மருத்துவமனை துவக்கக் கோரியுள்ளார். அரசு விதிமுறைகளின்படி முதலில் கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்கப்பட்டு, பின்பு கால்நடை மருந்தகமாகவும், அதற்குப் பின்னர்தான் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படும். கால்நடை கிளை நிலையம் அமைக்க குறைந்தது 3,000 கால்நடை அலகுகள் இருத்தல் வேண்டும். அந்தவகையிலே, வடகரை பகுதியில் 3,337 கால்நடை அலகுகள் உள்ளன. ஆகவே, வடகரை பகுதியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. இதுகுறித்து அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த தலைவியாகிய புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்கி, அம்மா அவர்களின் அரசியல் வாரிசாய் இன்று 'அரியர்' மாணவர்களின் அரசனாய் விளங்குகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

பிள்ளையாரை ஒரு தடவை சனி பிடிப்பதற்கு வந்ததாம். அப்போது பிள்ளையார், 'இன்றுபோய் நாளை வா, நாளை வந்து

2020 செப்டம்பர் 16]

*என்னைப் பிடித்துக்கொள்' என்று சொன்னாராம். இன்றுவரை சனியால் அவரைப் பிடிக்க முடியவில்லை. அதுபோல, 'நீட்' தேர்வில் மாணவர்களுக்கு தமிழகத்தில் ** விளைவித்த ** முகத்திரையை உலகத்திற்குத் தோலுரித்துக் காட்டிய (குறுக்கீடுகள்) துணிச்சல் மிக்க தலைவராய், (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா சொன்னதுபோல, அன்பிற்கு அன்பாய் நின்று, அறிவிற்கு அறிவாய் நின்று. . .*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, கேள்வி நேரத்தில் கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. ஆ. கோவிந்தசாமி: *பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல, அன்பிற்கு அன்பாய் நின்று, அறிவிற்கு அறிவாய் நின்று, துணிவிற்கு துணிவாய் நின்று, கொரோனா வைரஸ் தொற்று காலத்திலும் இடைவிடாது எங்கள் மாவட்டத்திற்கும் வந்து, எங்களுக்கெல்லாம் அறிவுரை கூறி, (குறுக்கீடுகள்) மக்களைக் காத்து எதிரிகளின் சிம்ம சொப்பனமாய், ஏழைகளின் விடிவெள்ளியாய் விளங்கும் எங்கள் முதல்வர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில், தங்களுக்கும், ஆட்சிக்கும் துணையாய் நிற்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நான் சொல்லிவிட்டேன், advise செய்துவிட்டேன். (குறுக்கீடுகள்) எதைச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) ** என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)*

திரு. ஆ. கோவிந்தசாமி: *நான் யாரையும், (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் (குறுக்கீடுகள்) வெட்டி வா என்றால், கட்டி வரும் போர்க் குணம் கொண்டு, இடைத் தேர்தல் மட்டுமல்லாமல், உள்ளாட்சித் தேர்தலிலும் எங்கள் மாவட்டம் என்றுமே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை என்று*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

நிரூபித்துக் காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) உலக அளவில் உயர் கல்வி படிக்கின்ற மாணவர்களின் சதவிகிதத்தைவிட தமிழகத்தை முதல் நிலைக்கு கொண்டு சென்ற என் மட்டற்ற மரியாதைக்குரிய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும், எனக்கு இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட தென்கரை கோட்டை ஊராட்சி, வடகரை பகுதியில், கால்நடை அலகுகள் அதிகமாக இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போதே சொன்னார்கள். எனவே, கால்நடை கிளை நிலையம் இல்லாமல், அங்கு கால்நடை மருத்துவமனையே தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், வடகரையில் ஏறக்குறைய நாள் ஒன்றுக்கு 3,800 லிட்டர் பாலும், தென்கரையில் 4,100 லிட்டர் பாலும், துரிஞ்சனஹள்ளியில் 3,800 லிட்டர் பாலும் கிடைக்கிறது. இங்கெல்லாம் பால் குளிரூட்டும் நிலையங்கள் இருக்கின்றன. எனவே, அங்கே கால்நடை கிளை நிலையங்களையும், வடகரையில் கால்நடை மருத்துவமனையையும் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வடகரை பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கின்றது என்று சொன்னேன். அதேபோல, மற்ற பகுதிகளிலேயும் கால்நடை கிளை நிலையம் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு ஏற்கெனவே கால்நடை கிளை நிலையங்களை அதிக அளவில் கொடுத்திருக்கின்றது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதிகளில் இணை இயக்குநர் தலைமையில் இருக்கின்ற மருத்துவக் குழு ஒன்றை அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின், அங்கு கால்நடை கிளை நிலையம் அமைப்பது குறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி ஒன்றியத்திற்குட்பட்ட நாயக்கனஹள்ளி ஊராட்சியிலும், அக்கமனஹள்ளி ஊராட்சியிலும் உள்ள கால்நடைகள் சிகிச்சைக்காக செல்ல வேண்டுமாயின் கால்நடை மருத்துவமனை அதிக தூரத்தில் உள்ளது. எனவே, இரண்டு ஊராட்சிகளின் நடுவில் சோலைகொட்டாய் என்ற பகுதியில் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமெனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பாப்பிரெட்டிப்பட்டி தொகுதியை பொறுத்தவரை, சுமார் 71,500 மாட்டு இனங்கள், 64,000 ஆட்டு இனங்கள், 7 இலட்சத்து 57 ஆயிரம் கோழியினங்கள் உள்ளன. இவற்றுக்கு மருத்துவ சேவை வழங்கிட ஏற்கெனவே ஒரு கால்நடை மருத்துவமனை, 22 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 5 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், விவசாயிகளினுடைய வீட்டிற்கே சென்று அவசர சிகிச்சைகள் வழங்கும் நோக்கில் 'அம்மா நடமாடும் அவசர கால்நடை சிகிச்சை ஊர்தி' ஒன்று செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, கால்நடைகளினுடைய அலகுகள், குறைந்தது 3,000–க்கும் மேற்பட்டு எங்கெல்லாம் இருக்கின்றதோ, அங்கெல்லாம் கால்நடை கிளை நிலையங்கள் அமைப்பதற்குண்டான வாய்ப்பு இருக்கிறது என்பதனைச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதிகளிலும் கால்நடை கிளை நிலையங்கள் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருந்தால், அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.